தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்

ந.க.எண்.83/2022/அ5 திருவல்லிக்கேணி, சென்னை -5. நாள்: 16.04.2022

வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பர அறிவிப்பு

சென்னை-5, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு பணியாளர் நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தினைச் சார்ந்த நபர்களிடமிருந்து **20.04.2022** முதல் **20.05.2022** மாலை **5.45** மணி வரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	பதவியின் பெயர்	ஊதிய விகிதம்	காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை	தகுதிகள்
1	உதவி மின்பணியாளர்	Pay Matrix 18 16600 - 52400	1	1.அரசால்/அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின் / மின் கம்பிப் பணியாளர் தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். 2.மின் உரிமம் வழங்கல் வாரியத்திடமிருந்து "H" சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
2	அலுவலக உதவியாளர்	Pay Matrix 17 15900 - 50400	1	1.8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3	கடைநிலை ஊழியர்	Pay Matrix 17 15900 - 50400	2	1.8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
4	திருவிலகு	Pay Matrix 17 15900 - 50400	2	1.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
5	இரவுக் காவலர்	Pay Matrix 17 15900 - 50400	1	1.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
6	உதவி கைங்கர்யம்	Pay Matrix 16 15700 - 50000	1	1.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 2.யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாட சாலையில் தொடர்புடைய துறையில் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். (தென்கலை வைணவ பிராமணர்கள் மட்டும்)
7	சன்னதி தீவட்டி	Pay Matrix 12 11600 - 36800	1	1.திருக்கோயிலில் தீவட்டி பணி பார்த்த அனுபவம். 2.தீவட்டி தயாரித்து பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். 3.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
8	உதவி பரிச்சாரகர்	Pay Matrix 10 10000- 31500	1	1.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 2.இத்திருக்கோயிலின் பழக்க வழக்கங்களுக் கேற்ப நெய்வேத்யம் மற்றும் பிரசாதம் தயாரிக்கத் தெரிந்திருக்க வேண்டும். (தென்கலை வைணவ பிராமணர்கள் மட்டும்)
9	கால்நடை பராமரிப்பு	Pay Matrix 10 10000- 31500	1	1.தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

நிபந்தனைகள்

1. திருக்கோயிலால் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் படி மட்டுமே உரிய சான்றிதழ் நகல்களுடன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும், துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-5. விண்ணப்பப்படிவம் மற்றும் நிபந்தனைகளை **hrce.tn.gov.in** மற்றும் **parthasarathy.hrce.tn.gov.in** என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணியிட விபரங்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டும் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பதாரர் **01.04.2022** அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வ.எண்.2 மற்றும் வ.எண்.3ல் விண்ணப்பிப்பவர்கள் கணினி அறிவு பெற்றிருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பதாரர் தமிழில் நன்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். மேலும் இந்து மதத்தை சார்ந்தவராகவும் இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். அசல் சான்றிதழ் எக்காரணத்தினை முன்னிட்டும் அனுப்பக்கூடாது. அசல் சான்றிதழ் நேர்முகத்தேர்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. வ.எண்.1 முதல் 9 வரை உள்ள அனைத்து பணியிடங்களுக்கும் தொடர்புடைய பணி சம்மந்தமாக நேர்முகத் தேர்வு நடத்தப்படும்.
7. விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் உடல் தகுதி சான்று பெற்று அதன் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். அனைத்து பணியிடங்களுக்கும், கூடுதலாக காவல்துறை சான்றிதழும் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
8. மேற்கண்ட பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதி என்பது இத்திருக்கோயிலின் காலகாலமாக பின்பற்றி, பணியாற்றி வந்த விவரங்களின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
9. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், நன்னடத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பாற்றவோ ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், பட்டகடனை தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அரசு பணியிலிருந்தும், இதர நிறுவனங்களிலிருந்தும், திருக்கோயில்களிலிருந்தும், விலக்கப்பட்டவர்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் போன்றோர் விண்ணப்பிக்க தகுதி அற்றவர்கள்
10. இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பில் காணும் பணியிடங்கள் இத்திருக்கோயிலின் பாரம்பரியம் மற்றும் நடைமுறையில் உள்ள பணியிடங்கள் என்பதால், அதனடிப்படையில் பணியிடங்களுக்கான தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20.05.2022 மாலை 5.45 மணி முடிய
11. நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்குப் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
12. பூர்த்தி செய்து திருக்கோயிலுக்கு வரப்படும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்காணலுக்கான அறிவிப்பு வழங்கப்படும்.

பெ.க.கவேனிதா,
உதவி ஆணையர்,
துணை ஆணையர் /செயல் அலுவலர் / தக்கார் (கூ.பொ)

செ.ம.தொ.அ/07/சென்னை/2022/நாள் : 16.04.2022

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"